செ.வெ.எண்.59 நாள்.22.12.2017

# பத்திரிக்கை செய்தி

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் துறைத்தேர்வுகள் டிசம்பர் 2017 23.12.2017 முதல் 31.12.2017 வரை (முற்பகல் மற்றும் பிற்பகல் இரு வேளைகளிலும்) (25.12.2017 தவிர) திருநெல்வேலி மாவட்டத்தில் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, கல்லணை, திருநெல்வேலி டவுண் கல்வி நிலையத்தில் வைத்து நடைபெறவுள்ளது. மேற்படி தேர்வினை 2345 நபர்கள் எழுதவுள்ளார்கள். இத்தேர்வினை கண்காணிக்க திருநெல்வேலி கோட்டாட்சியர் தலைமையில் திருநெல்வேலி வட்டாட்சியருக்கு பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளது. தேர்வு நாளன்று தடைபடாத மின்சாரம் வழங்கவும், பேரூந்துகளை தேர்வு மையத்திற்கு சீராக இயக்கக் கேட்டும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்திரவிடப்பட்டுள்ளது. தேர்வு நடைபெறும் கல்வி நிலையத்திற்கு காவல் துறை மூலம் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேர்வு எழுதுவோர் தேர்வு மையங்களை கண்டறிந்து முன்கூட்டியே தேர்வு எழுத வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், தேர்வு அறையினுள் செல்போன்களை எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு எழுதுபவர்கள் தவிர இதர நபர்கள் தேர்வு மைய வளாகத்திற்குள் செல்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.